செ.வெ.எண்: 573 நாள்: 11.09.2020

**<u>தஞ்சாவூர் மாவட்டத்தில் கைத்தறி மற்றும் கைவினைப்பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருவோர்க்கு டாம்கோ நிறுவனம் மூலம் கடனுதவி பெற மாவட்ட ஆட்சித்தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அழைப்பு</u>**

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகத்தின் மூலம் VIRASAT என்ற திட்டத்தின் கீழ் கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் செய்யும் ஏழ்மையான கலைஞர்களின் முன்னேற்றத்திற்காக 2020-2021 ஆம் ஆண்டிற்கு கடனுதவி வழங்கப்படவுள்ளது. தகுதியான பயனாளிகள் டாம்கோ நிறுவனத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு டாம்கோ நிறுவனம் மூலம் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகத்திற்கு பரிந்துரை செய்யப்படும். இதில் கடன் பெற சிறுபான்மையினராக இருத்தல் வேண்டும். கைத்தறி மற்றும் கைவினைப்பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டு இருக்கவேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடன் வழங்கப்படும். ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் வசிப்பவராயின் ரூ98,000/- ம் நகர்புறங்களில் வசிப்பவராயின் ரூ1,20,000/-ம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

கடன் தொகை ரூ10 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு 5 ஆண்டு காலக்கெடுவில் ஆண் நபராக இருப்பின் 5% வட்டி விகிதத்திலும் பெண் நபராக இருப்பின் 4% வட்டி விகிதத்திலும் வழங்கப்படவுள்ளதால் தகுதியுடைய நபர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் சாதிச்சான்று நகல், வருமானச்சான்று நகல், குடும்ப அட்டை நகல், தொழில் குறித்த விபரம் மற்றும் திட்ட அறிக்கை முதலியவற்றை இணைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் தஞ்சாவூர்/கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகளில் விண்ணப்பித்து பயன்பெறலாம், தகுதியான விண்ணப்பங்கள் டாம்கோ நிறுவனத்திற்கு பரிந்துரைசெய்யப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் டெல்லியில் நடைபெறவுள்ள மெகா லோன் மேளா விழாவில் கலந்துக்கொள்ள வாய்ப்புள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு,ம,கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்,

////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////////

செய்தி வெளியீடு செய்தி,மக்கள் தொடர் அலுவலர் தஞ்சாவூர்.